விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 புரட்டாசி 15 முறை 15 இதழ் 233

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1-10-1985

# மட்டக்களப்பு நகரில் 1000 இளைஞர்கள் கைது!

## நேற்று மாலை நடந்த மூன்று மணிநேர 'முற்றுகை'

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று மாலை ஆயுதப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட மூன்று மணி நேரத் திடீர் 'முற்றுகை'யில் சுமார் ஆயிரம் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் பெரும் பதற்றம் ஏற்பட்டது!

இவர்களில் ஒரு பகுதியினர் நேற்றிரவு விடுதலை செய்யப்பட்டதாகப் பிந்திக் கிடைத்த தகவல் தெரிவிக்கிறது.

நேற்று மாலை மூன்றரை மணியளவில் மட்டக்களப்பு நகரில் பல வாகனங்களில் திடீரென வந்த அதிரடிப் பிரிவினர் நடத்திய முற்றுகையில் சுமார் ஆயிரம் இளைஞர்கள் கைதானார்கள். கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் வசமிருந்த சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டு 'ட்ரக்'குகளில் கொண்டு செல்லப்பட்டன.

இத்திடீர் முற்றுகை கோட்டைமுனை, கல்லடிப் பாலம், ஊறணி ஆகிய இடங்களில் நடந்தது.

(5-ம் பக்கம் பார்க்க)

### பஸ் சேவை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நேற்று அதிகாலை நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து பஸ் சேவையும் பாதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட பஸ்கள் முறிகண்டி, மாங்குளம் ஆகிய இடங்கள் வரை சென்று திரும்பிவிட்டன.

அதே நேரத்தில் வவுனியாவிலிருந்து பஸ் எதுவும் யாழ்ப்பாணம் வரவில்லை. கொழும்பிலிருந்தும் பஸ்கள் வரவில்லை.

**பஸ் சேவை நடக்காது**

நிலைமை இவ்வாறிருக்க டீசல் தட்டுப்பாடு காரணமாக இன்று யாழ்ப்பாணத்தில் பஸ் சேவை நடைபெறமாட்டாது என்று கோண்டாவில் பஸ் டிப்போ வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

## இன்று ஆறுவது நாள்! கொட்டும் மழையிலும் நீடித்த பாதயாத்திரை! மக்கள் பெரும் வரவேற்பு!

[ஏ. வி. மாணிக்கம்]

இறைச்சாலைகளிலும், முகாம்களிலும் 19 மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை விடுதலை செய் அல்லது நீதிமன்ற விசாரணைக்குட்படுத்து என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டிருந்த தொடர் பாதயாத்திரை குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்திலிருந்து நேற்றுக்காலை ஆரம்பமானது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது குறிப்பிட்ட இடத்தை அடையும்

(5 ம் பக்கம் பார்க்க)

## 94பேர் கைது

(கொழும்பு)

பாதுகாப்பு படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது விசாரணைக்காக தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 94பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆண்டான்குளம், கட்டிமுறிச்சை, உன்னிச்சை ஆகிய இடங்களில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை திருகோணமலையிலுள்ள கிண்ணியாவில் ரோந்துசென்ற ஆயுதப்படையினரை தீவிரவாதிகள் எதிர்கொண்டபொழுது ஆயுதப் படையினர் அவர்களை வெற்றிகரமாகத் தாக்கி பின்வாங்கச் செய்துள்ளார்கள் என்றும் தீவிரவாதிகள் ஆயுதங்களைப் போட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டார்கள் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன. (ஐ)

## மட்டக்களப்பு தபாலகத்தில் கொள்ளை முயற்சி தோல்வி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தபால் அலுவலகத்தில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்தது. நேற்றுக் காலை எட்டரை மணியளவில் மட்டக்களப்பு தபாலகத்தில் பின்புற வழி

(5-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கூ. ஊ. தொழிற்சங்கம்: வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ் பட்டணக்கிளை கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் நடாத்த இருந்த வேலை

ஊழியர்கள் இன்று தொடக்

(5-ம் பக்கம் பார்க்க)

## கூட்டுமுன்னணி - கூட்டணி சந்திப்பு: விரிவாக ஆலோசனை

### டில்லி புறப்படமுன்னர் எம். ஜி. ஆரை சந்திப்பார்கள்

(சென்னை)

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களும், ஈழதேசிய விடுதலை முன்னணித் தலைவர்களும் நேற்று சென்னையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரி அண்மையில் மேற்கொண்ட கொழும்பு விஜயத்தின்போது இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுடனும், தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலியுடனும் நடத்திய பேச்சு

(5ம் பக்கம் பார்க்க)

ரூ. 15 லட்சம் பெறுமதியான பொருட்கள் கொள்ளை:

## பெரும்பகுதி பொருள் மீட்பு தீவிரவாதக்குழு நடவடிக்கை

— கா போ்சநாதன் —

சைத்தடியில் இனந்தெரியாத இளைஞர்களினால் துடபாக்கி முனையில் லொறியுடன் கொள்ளையடிக்கப்பட்ட 15 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களில் பெரும்பகுதி தமிழ் ஈழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) ஆகிய இயக்கங்கள் எடுத்த தீவிர அக்கறையின் பயனாக 'புளொட்' இயக்கத்தினால் மீட்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள எட்டு வீடுகளிலும் வடலிகளிலுமிருந்தும் இப் பொருட்கள் 'புளொட்'டினால் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(5 ம் பக்கம் பார்க்க)

## வவனியா பொலிஸ் நிலையத் தாக்குதல்! கட்டிடங்கள் சேதம்!

(கொழும்பு)

வவனியா பொலிஸ் நிலையத்தை நேற்று அதிகாலை மூன்று மணியளவில் தீவிரவாதிகள் தாக்கியதாகவும் அறிவித்துள்ளது.

இத்தாக்குதலை பொலிஸார் வெற்றிகரமாக முறியடித்ததாகவும் அரசாங்கம் [illegible]

இத்தாக்குதலின் போது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர்

(5-ம் பக்கம் பார்க்க)

வர்த்தக சங்கத்தின் வேண்டுகோள்!

★

வீடியோ பிரசாத் நிலையத்தில் கடமையாற்றும் சேனாதிராஜா ராமநாதனை விடுதலைசெய்யக் கோரி வர்த்தக நிலையங்களை மூடித் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தமைக்காக வர்த்தகப் பொதுமக்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், பொதுமக்களின் நன்மை கருதி 1-10-85 செவ்வாய்க்கிழமை வர்த்தக நிலையங்களைத் திறந்து வழமை போல வியாபாரம் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இராமநாதன் அவர்களை உடனடியாக விடுதலை செய்து சம்பந்தப்பட்டவர்கள் உரியவர்களுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

யாழ். வர்த்தக சங்கம்,
செயற்குழு.

30-9-85 (1011)

# விளம்பரம்

## விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, வெள்ளிகம்பதி காளிகோவிலுக்கு மேற்குப்பக்கத்திலுள்ள கல்வீடு மட்டும் விற்பனைக்குண்டு. ஓடுகள், மரங்கள், நிலை, யன்னல் என்பன. தொடர்பு: மா. கந்தசாமி, பட்டினசபை ஒழுங்கை, மானிப்பாய். 998

சுத்தமான பசுப்பால் விற்பனைக்குண்டு 102, அம்பலவாணர் ரோட், அத்தியடி, யாழ்ப்பாணம். 995

புத்தம் புதிய National NV 870 EN டெக் ஒன்று விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்க: குணம் வீடியோ சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23665

(1003)

சங்கானை யூனியன் M P C.S.க்கு முன்பக்கமாக ஒரு பரப்புக் காணியில் கடைக் கட்டிடமும், வீடும், கிணறும், மேல் மாடி அமைக்கும் வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. பொன்னுத்துரை, பட்டின சபை வீதி, சங்கானை. 991

நடராசாவும் சபாநாதனும் சட்டத்தரணிகள் வட்டுக்கோட்டை.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

இல. தத்துவம்/3872

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற குலசிங்கம் கைம்பெண் நாகரத்தினம் என்பவரது மரணசாதனமில்லாச் சொத்துக்களின் நிர்வாகம் சம்பந்தப்பட்ட விடயத்தில்.

மரணமெய்தியவர்

1. கனகரத்தினம் இராமசந்திரனும்,
2. பெண் பாலேஸ்வரியும் வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை

மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லாச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு ஆடி மாதம் 19-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 24ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி,

கு. குலசிங்கம்

பதிவாளர்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

19-7-85

காரணம் காட்டும் திகதி 4-10-85-க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கு. குலசிங்கம்

பதிவாளர்

962

## பொதுக் கூட்டத்தில் அங்கீகாரம்

(சுழிபுரம்)

மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையை தனியார் வைத்தியக் கல்லூரி நிர்வாகத்தினர் தேவைக்குபயன் படுத்தும் பொதுச்சபையின் அங்கீகாரம் சங்கப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடபகுதி கூட்டுறவு உதவி ஆணையாளரால் கூட்டப்பட்ட பொதுக் கூட்டம் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்றது வைத்தியசாலையின் கணக்கறிக்கை வெளிப்படுத்தும் பொதுக்கூட்டத்தை வரும் மார்ச் மாதத்தில் நடாத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## பிறந்ததின நினைவஞ்சலி

திருமதி மங்கையர்க்கரசி கனகரத்தினம்



[illegible] தங்கள் நினைவு, பிறந்த தினமான இன்றும் நீங்கவில்லை.

-பிரிவால் துயருறும்: கணவன்.

A/2, F-4, புளுமெண்டல் தொடர்மாடி, கொழும்பு-12. 979

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

தெல்லிப்பழை, காலஞ்சென்ற ஐசாக் பொன்னையா துரைரத்தினம் என்பவரின் மரணசாதனவிடயத்தில்.

-மரணமெய்தியவர்.

மரணசாதன நியாயாதிக்கம்

இல. ரி/3903

ஐசாக் பொன்னையா துரைரத்தினம் கைம்பெண் ரூஸ் பரிமளம், 157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

-மனுதாரர்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டதுமான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1985ம் ஆண்டு ஆடி மாதம் 22 ஆம்நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது

1985ம் ஆண்டு ஆடி மாதம் 22ந் திகதி

நீதிமன்றக் கட்டளைப்படி.

கு. குலசிங்கம்,

பதிவாளர்.

வரைதல்:
ச. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி. 95°


## விக்னு டியூசன் சென்றர்.

52, ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த நிறுவனம்)

துரித மீட்டல் வகுப்புகள்

O/L DAY CLASSES
ஆரம்பம்: 2-10 85 காலை 8-30 மணி
EVENING CLASSES
ஆரம்பம்: 2-10-85 பி. ப. 2-15 மணி

மு. குறிப்பு:

O/L வகுப்பு சிறந்த சித்தியுடன் சித்தி பெற நிச்சயம் எமது நிறுவனம் கைகொடுக்கும்.

கடந்த கால முடிவுகள் இதற்கு சான்றாகும்.

(1000)


## நினைவஞ்சலி-சிவபதப்பேறு

உயர்திரு.

செல்லையா இரத்தினசபாபதி



சிவபூசா துரந்தரர், நல்லூர் கந்தன் உதயகாலப் பூசைச் சேமக்கலத் தொண்டன், கொழும்பு C P H Eஇல் உயர் அதிகாரியாயிருந்து இளைப்பாறியவர். 21-செம்மணி வீதியில் சிவத்தவர்.

உயர்திரு. செல்லையா இரத்தினசபாபதி அவர்கள்

6-09-85 வெள்ளிக்கிழமை இரவு 11-15 மணிக்கு திருக்கேதீச்சரத்தில் இறைவனடி சேர்ந்துள்ளார். அவருடைய எல்லாக் கிரியைகளும் அவரது உத்தம பத்தினி தீபசாந்தி இனிது நிறைவேற்றியுள்ளார். எல்லாரும் இதனை ஏற்றுக் கொள்ளவும்.

அறிவிப்பவர்: திருமதி தீ. இரத்தினசபாபதி

999

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

திரு. செல்வநாயகம் ஸ்ரீகரன்

(மாவட்ட விற்பனை அதிகாரி)

(COLOMBO PAINTS LTD and COLLETTES DISTRIBUTORS LTD).



தோற்றம்: 18-01-1949

மறைவு: 02-09-1985

எம் குடும்பம் தனை ஒலிர்க வைத்த பெருந்தகையே! உங்கள் நலனை ஒறுத்து, வெறுத்து எம்மைக் காத்த சுடர் ஒளியே, எம்மை எல்லாம் ஆளாக்கிய அருட் சுடரே, தப்தைத் தியாகம் செய்து எம்மை வளர்த்தெடுத்த கண்ணின் மணியே, எம்மை மேலோங்க வைத்த ஒளிவிளக்கே, உங்கள் பொறுமைகளை சாதித்து நமையினுலும் உங்களைக் கவரவைத்த கற்பகமே, இன்பம் பல அனுபவித்து எம்மையும் இன்பத்தில் வாழவைத்த ஆருயிரே, நொடிப்பொழுதும் தவறாது எம்மை ஆளாக்க துடிதுடித்த பெருந்தகையே, எம் ஆருயிரே, பார் எல்லாம் ஒன்று கூடினுலும் எங்கள் துயர் துடைத்து உங்கள் பிரிவை ஆற்ற முடியாது. எம் உயிரே நீங்கள் இறந்து ஒரு மாதமாகிய இன்று உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், தாய், சகோதரர்கள், மாமி, மைத்துனர்.

''மகேசவாசம்'', கொடிகாமம். (982)

## உயர்ந்த சேவை

(சுழிபுரம்)

சுழிபுரம், காட்டுப்புலம் குடாக்கனை, பாண்டவட்டை ஆகிய பகுதிகளில் வாழும் தொழுநோயாளர் பகுதிக்கு தேவையான சிறுவர் பாடசாலை மலசலகூடம், பொதுக் கிணறு ஆகிய தேவைகளை நிறைவு செய்ய மத போதகர்கள் முன்வந்துள்ளனர்,

சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினருடன் சேர்ந்து இவற்றை நிறைவு செய்து கொடுக்கும் திட்டத்தை மதபோதகர்கள் வகுத்துள்ளனர். இவர்கள் சென்ற வாரம் மேற்படி இடங்களைப் பார்வையிட்டுகுறைபாடுகளைக் கண்டு அறிந்தனர்.

## வட்டு. பிரஜைகள் குழுவின் விளக்கம்

''பிரஜைகள் குழுவிடம் காசோலை கொள்ளை'' என்ற தலைப்பில் கடந்த 28 ம் திகதி சனிக்கிழமை 'ஈழநாடு' 8ம்பக்கத்தில் வெளியான செய்தி தொடர்பாக வட்டுக்கோட்டை பிரஜைகள் குழு செயலாளர் திரு. எம். சண்முகவடிவேலு, தலைவர் திரு. எஸ். இளையப்பாபிள்ளை ஆகியோர் பின்வருமாறு எழுதியுள்ளனர்.

1985-9-21 அன்று சில இளைஞர்கள் எமது வீட்டிற்குவந்து சமூகசேவையின் பொருட்டுத் தங்களுக்குப் பணம் தேவைப்பட்டதாகவும் எனவே எமது பிரஜைகள் குழுவுக்கு எமது செலவை ஈடுசெய்வதற்காக கிடைத்த பணத்தில் ஒரு பகுதியை தமக்குத் தந்துதவுமாறு பரிவுடன் வேண்டிக்கொண்டனர். எனவே எமது காசோலையை அவர்களிடம் மனப்பூர்வமாகக் கையளித்தோம். கையளிக்கப்பட்ட நேரத்தில் செயலாளரும், பொருளாளரும் உடன் இருந்தனர்.

1985-9-27ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எமது ஊரில் நடைபெறற களவுகளுக்கு கண்டனம் தெரிவித்ததுடன் இத்தகைய களவுகள் மேலும் நடைபெறாத வண்ணம் இயக்கங்களை வேண்டிக் கொள்ளவேண்டுமெனவும் இக்களவுகளை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்தப்படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## விளம்பரதாரர் கவனத்துக்கு!

'ஈழநாடு' பத்திரிகையில் அடுத்த நாள் வெளிவரவேண்டிய விளம்பரங்கள். பகல் 11-30 மணிவரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை விளம்பரதாரர்கள் கவனத்தில் கொள்ளவும்.

இதன் பின்னர் வரும் விளம்பரங்கள் அடுத்தநாள் பத்திரிகையில் வெளிவரவேண்டுமானுல், மேலதிகக் கட்டணம் செலுத்த வேண்டும்.

நிர்வாகி
'ஈழநாடு'

# பூட்டானில் ராஜீவ் முக்கிய பேச்சுவார்த்தையிலீடுபட்டார்

## இன்று தேசியசட்டசபையில் உரையாற்றுவார்

(திம்பு)

பூட்டானுக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி பூட்டான் தலைவர்களுடன் இந்திய-பூட்டான் நல்லுறவு மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து நேற்று பேச்சு நடத்தியுள்ளார்.

இமயமலைச்சாரலில் இந்தியாவின் எல்லையாக அமைந்திருக்கும் பூட்டான் நாட்டுக்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் முதல் உத்தியோகபூர்வ விஜயம் இதுவாகும்.

இந்தியாவுக்கும் பூட்டானுக்கும் பாரம்பரியமாக இருந்து வரும் இருதரப்பு உறவுகளை தொடர்ந்து பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை இந்தியப் பிரதமரும் பூட்டான் மன்னரும் வலியுறுத்தியுள்ளனர் அத்துடன் பிராந்திய ஒத்துழைப்பு முக்கியமாக தெற்காசிய ஒத்துழைப்பு நாடுகள் அமைப்பை விரிவாக்குவது மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்கள் முக்கியமான பேச்சுக்களை நடத்தினார்கள்.

தற்போது பூட்டானில் தங்கியிருக்கும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி பூட்டானின் தேசியசட்டசபையில் இன்று உரையாற்றவுள்ளார். இந்திய — பூட்டான் நல்லுறவுகள் குறித்து இவர் இந்த சட்டசபையில் முக்கிய உரையொன்றை ஆற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பூட்டானின் வரலாற்றுப் பெருமைமிக்க கலாச்சார இன்னங்களையும் இந்தியப் பிரதமர் சென்று பார்வையிட்டார்.

இந்திய—சீன எல்லையில் பூட்டான் அமைந்திருப்பதினால் பூட்டான் இந்தியாவுக்கு மிகவும் வேண்டியதாகவுள்ள ஒரு நாடாகும்.

# புதுடில்லியில் சர்வதேச போர் எதிர்ப்பு மாநாடு

[புதுடில்லி]

சர்வதேச போர் எதிர்ப்பு மகாநாடொன்று எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ம் திகதி முதல் ஜனவரி 7ம் திகதி வரையான எட்டு நாட்களுக்கு வார்தாவில் நடைபெறவிருக்கின்றது.

உலகத்தில் இன்று ஏற்பட்டுள்ள போர் அபாயத்தை நிறுத்துவது சம்பந்தமாக இம் மகாநாட்டில் ஆராயப்படும்.

மகாநாட்டில் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை இழந்தவர்களும் அகிம்சை போராட்டத்தில் நம்பிக்கையுள்ள பொதுநிறுவனங்களின் உலகப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

உலகத்தின் அழிவுக்கு அணு ஆயுத உற்பத்தியே காரணம் என்றும் இதனைக் கட்டுப்படுத்துவது அல்லது இல்லாமல் செய்வது என்பது பற்றியே இம் மகாநாட்டில் ஆலோசிக்கப்படவிருக்கின்றது.

இலங்கையிலிருந்தும் பிரதிநிதிகள் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

(வேலணை நிருபர்)

# "நெற்செய்கைக்கு தேவை அடிக்கட்டுப் பசளையே!"

(வவனியா)

"எமது நாட்டின் சனப்பெருக்கம் அதிகரிக்க உணவுத் தேவையும் அதிகரித்தது. எனவே விவசாய விருத்திக்கு பழைய சேதனப் பசளைகள் ஈடுகொடுக்கமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் புதிய நெல்லினங்கள் அறிமுகம் செய்யப்பட்டபோது, விவசாயத்தினைப் பெருக்கும் நோக்குடன் நவீன உரப்பசளைகள் பிரயோகிக்கப்பட்டன."

இவ்வாறு நெடுங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெற்ற உரவார வைபவத்தில் வவனியா விவசாய உதவிப் பணிப்பாளர் திரு கே. குமாரசாமி தெரிவித்தார்.

இவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது: "வவனியா மாவட்டத்தில் ஏக்கருக்கு 57 - 60 புசல் நெல் சராசரியான விளைவு ஆகும். இவ்விளைவு குன்றியமைக்கு பலவேறு காரணங்கள் இருக்கலாம். குறித்த அளவுப் பசளை குறித்த நேரத்தில் போடாமல் இருக்கலாம். தற்காலகட்டத்தில் சரியான பசளைப்பிரயோகம் அவசியமாவுள்ளது.

நெல்வேளாண்மைக்கு அடிக்கட்டுப் பசளைப் பிரயோகம் மிகமிக அவசியமானது. இப்பசளையினை வேர்ப்பசளை என்றும் கூறுவார்கள் பசளை தாவரத்திற்கு செழிப்பினைக் கொடுக்கவும், இனப்பெருக்கத்தினை ஊக்குவிக்கவும் அத்தியாவசியமானதாகும் மாவட்டத்திற்கு மாவட்டம் மண்ணின் தன்மையினைப் பொறுத்து பசளைப்பிரயோகம் சிபார்சு செய்யப்படுகின்றது" என்றார்.

திட்டமிடல் அதிகாரி திரு. ரி. துரைசிங்கம், உதவி அரச அதிபர் திரு பி பத்மநாதன் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து உரையாற்றினார்கள்.

## ஆணையாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் குடிமனைவரை ஒவ்வொருவரும் தங்கள் வீட்டு வளவுக்குள் குப்பைகளை புதைத்து பசளையாக்குமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி வி கே சிவஞானம் நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார். (௳)

## மனனப் போட்டி

(சுழிபுரம்)

நவராத்திரி விழாவை யொட்டி வழக்கம்பறை சனசமூக பஜனைச்சபையினர் சகலகலா வல்லிமாலை மனனப் போட்டியை நடத்த முன்வந்துள்ளனர்.

போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்குரிய பரிசுகள் வழக்கம்பறையில் நடைபெறும் நவராத்திரி விழாவின் போது வழங்கப்படும் இவ் மனனப் போட்டியில் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவர்கள் மட்டுமே பங்கு கொள்ளலாம்.

# லெபனனில் முஸ்லிம் குழுக்களின் சண்டை தொடருகிறது!

பெய்ரூட், செப். 30

லெபனனில் சியா—சுன்னி முஸ்லிம் குழுவினரிடையே நேற்று இரண்டாவது நாளாக கடும் சண்டை இடம்பெற்றது.

இச் சண்டையில் பலர் இறந்திருப்பதோடு ஏராளமானோர் காயமடைந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்த இருபகுதியினரும் இப்பகுதியை தத்தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு இச் சண்டையில் ஈடுபட்டுவருகின்றனர் நேற்று ஆரம்பமான சண்டை இருதரப்பினரிடையேயும் பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரானின் எண்ணெய் நிலையங்களை ஈராக்கிய விமானங்கள் தாக்கின

(பாக்தாத்)

ஈரானின் முக்கிய எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் மீது ஈராக்கிய விமானங்கள் நேற்று கடுமையான விமானத் தாக்குதலை மேற்கொண்டன. கடந்த சில நாட்களில் 6வது தடவையாக இந்த விமானத் தாக்குதலை ஈராக் மேற்கொண்டுள்ளது. இந்த தாக்குதலால் ஈரான்தரப்பில் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளது என்று ஈராக் அறிவித்துள்ளது.

இதேவேளை ஈராக்கின் பசறுதுறைமுகத்தில் ஈரான் கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

## இவ்வாண்டு டிசம்பர் மாதம்

# சேலத்தில் 3-வது உலகத்தமிழ் பண்பாட்டு இயக்க மாநாடு

[சென்னை]

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 3-வது மகாநாடு தமிழக அரசின் ஆதரவுடன் சேலம் மாவட்டத்தில் வரும் டிசம்பர் மாதம் 13-ம, 14-ம் 15-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது.

உலகச் செய்திகள்

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு. இரா. ந வீரப்பன் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழா கலாசார ரீதியாகவே நடைபெறவிருக்கின்றது. எந்த நாட்டின் அரசியலும் இம்மகாநாட்டில் இடம்பெறமாட்டாதாம்.

மகாநாட்டிற்கானபூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனிப்பதற்கென உலகத்தமிழ பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் திரு இரா. ந வீரப்பன் மலேசியாவில் இருந்து விமானமூலம் சென்னை வந்துள்ளார்.

சென்னைக்கு வரும் வழியில் பல நாடுகளுக்கும்சென்று மகாநாடு சிறப்புறநடைபெறுவதற்கான ஆதரவுகளைத் திரட்டி வந்துள்ளதுடன் பேராளர்களை யுப வருமாறும் அழைப்பு விடுத்தும் வந்துள்ளார்.

இவர் மொறிஷியஸ், சிங்கப்பூர், பர்மா, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுக்கும்சென்று ஆதரவு திரட்டி வந்துள்ளார்.

மேலும் இந்தியாவின் மாநிலங்களான மேற்கு வங்காளம், ஜம்மு-காஷ்மீர், மஹாராஸ்டிரா உட்பட சகல மாநிலங்களுக்கும்சென்று மகாநாடு பற்றி கருத்தரங்குகள் நடத்தி ஆதரவு திரட்டிவருகின்றார்.

இதேவேளையில் மகாநாட்டிற்கு 40க்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து பேராளர்கள்வருவதாக விருப்பம் தெரிவித்து கடிதங்கள் வந்துள்ளதாகவும் திரு வீரப்பன் தெரிவித்துள்ளார்.

இம்மகாநாட்டில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கிறது.

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் முதல் மகாநாடு சென்னையில் 977-ம் ஆண்டு 2 வது மகாநாடு மொறிஷியஸில் 1982லும் நடைபெற்றது.

# குறைந்த ஊதியத்துடன் வேலை; மறுத்தால் வெளியேற்றம்!

## சவூதி தலைநகரில் இளைஞர்கள் நிலைமை

(சவூதியிலிருந்து எம். சுபேந்திரன்)

சவூதி அரேபியாவின் தலைநகரமான றியாட்டில் தெற்கே உள்ள கம்பனி ஒன்றில் பணியாற்றும் வடபகுதியைச் சேர்ந்த ஒன்பது பேரை இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை இவர்கள் பணியாற்றும் கம்பனி துரிதமாக மேற்கொண்டுள்ளது.

வட்டுக்கோட்டை, வதிரி, மீசாலை, சாவகச்சேரி கிளிநொச்சி யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை ஆகிய இடங்களைச்சேர்ந்த ஒன்பது பேரையே இலங்கைக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது இலங்கை வர இருக்கும் இந்த ஒன்பது பேரில் ஏழுபேர் இளைஞர்களாவர்.

பிரஸ்தாபகம்பனி இதுவரை காலமும்வழங்கிவந்தமாதாந்த அடிப்படைச் சம்பளமான 450 றியால் தொகையை கடந்த 15-ம் திகதியிலிருந்து 350 றியாலாகக் குறைத்ததைத் தொடர்ந்து இவர்கள் தொடர்ந்தும் இக்கம்பனியில் வேலைசெய்ய மறுத்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப ஒன்பது பேரினதும் சவூதிக்கான அடையாள அட்டையைக் கம்பனி பறிமுதல் செய்ததுடன் கூடிய விரைவில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அறிவித்துள்ளது.

அண்மைக்காலமாக சவூதி அரேபியாவிற்கு வேலைவாய்ப்புப்பெற்றுவரும் இலங்கையர்கள் மாதாந்தம் 350 றியாலுக்கும் குறைவான அடிப்படைச் சம்பளத்துடன் வந்துசேர்வதாலேயே பிரஸ்தாப கம்பனியும் இக்கம்பனியில் பணியாற்றும் நூற்றுக்கும் அதிகமான இலங்கையரின் மாதாந்தச் சம்பளத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாகக் கம்பனி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்கே பணியாற்றும் இலங்கையரில் எவராவது குறைக்கப்பட்ட சம்பளத்துடன் வேலை செய்ய மறுத்தால் அவர்களும் உடனே அனுப்பிவைக்கப்படுவார்கள் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# 'நோய்களைத் தடுக்கும் சக்தி தாய்ப்பாலுக்கு உண்டு'

(வவனியா)

"தாய்ப்பால் குழந்தைகளுக்கு முக்கியமானதாகும் ஒரு குழந்தை பிறந்து எவ்வளவு கூடிய சீக்கிரம் பால் ஊட்டமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் அந்தத்தாய் தனது குழந்தைக்கு தாய்ப்பால் ஊட்டவேண்டும் நோய்க்கிருமி இல்லாத பால் என்றால் அது தாய்ப்பால்தான் நோய்களைத் தடுக்கும் சக்தி கொண்டது தாய்ப்பால்தான் இது மிக அவசியமானது" என்று தாய்மார்களுக்கு ஆலோசனை கூறினார், வவனியா - மன்னார் மாவட்ட தாய்சேய் மருத்துவ அதிகாரி டாக்டர் திருமதி எஸ் மாணிக்கராஜா

நெடுங்கேணி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தாய்களுக்கான கருத்தரங்கில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் பேசுகையில், "தாய்க்கும், குழந்தைகளுக்கிடையே ஒரு பாச உணர்வு பாலூட்டலின் மூலமே பிணைக்கப்படுகின்றது" என்றும் கூறினார்

திட்டமிடல் பிரிவினரின் அனுசரணையுடன் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.

### மணி வாக்கு

நம்பிக்கையைக் கொண்டு, மனிதன் வீரத்தை நிருணயித்துவிடலாம். — எமர்சன்.

# குற்றப் பத்திரம் தமிழில் இல்லை! நீதிபதிக்கு தர்மசங்கடம்!!

## சட்டமா அதிபர் திணைக்களம்மீது கண்டனம்

(கொழும்பு)

சந்தேகநபர்களுக்கு வழங்க வேண்டிய குற்றப்பத்திரங்களை தமிழிலும் சட்டமா அதிபர் திணைக்களம் தயாரிக்கத் தவறுவதனால் சிங்களத்திலுள்ள குற்றப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுமாறு சந்தேக நபர்களை கெஞ்சிக் கேட்க வேண்டிய நிலை தமக்கு ஏற்படுவதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றம் சாட்டிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. எச். டபிள்யூ. சேனநாயக்கா இனிமேல் இது போன்ற சந்தர்ப்பங்களில் தமிழில் குற்றப்பத்திரங்கள் இன்றி நீதிமன்றுக்கு வரவேண்டாம் என அரச தரப்பு சட்டத்தரணியிடம் கூறினார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் போதிய தமிழ் ஊழியர்கள் இன்மையால் ஏற்படும் நிர்வாகச் சிக்கலே இதற்குக் காரணம் என அரச தரப்பு சட்டத்தரணி கூறினார். எனினும் இனிமேலும் தமக்கு இதுபோன்ற தர்ம சங்கடமான நிலையை ஏற்படுத்த வேண்டாம் என்றும் கூறிய நீதிபதி இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் கவனத்திற்குக் கொண்டு வருமாறும் நீதிமன்றத்திற்குப் பணிப்புரை வழங்கினார்.

# நமது நோக்கு

## 'பஞ்சிமான்' பொய்மான்!

தவத்துக்காகக் காட்டுக்குச்சென்றிருந்த ஸ்ரீராமனும் சீதையும் சிறிது நேரம் பொய் மானுக்கு ஆசைப்பட்டார்கள். அந்த ஆசைக்கு இடம் கொடுத்ததால் அவர்கள் பெரும் துயரத்துக்கு ஆளானார்கள்.

ஸ்ரீராமனும் சீதையும் ஆசைக்கு இடங்கொடுத்ததால் துயரத்துக்கு ஆளானவர்கள் அவ்விருவர் மட்டுமல்ல; காடுசென்ற இருவரும் எப்போது நாடுவந்து ஆட்சியை நடத்துவார்களென்று ஆவற்பட்ட பொதுமக்கள் அனைவரும் இத் துயரத்துக்குப் பலியானார்கள்.

இன்று இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்கள், முஸ்லிம்கள் முதலிய அனைவரும் சமாதானம் சமாதானம் என்று ஓலமிடுகின்றனர், போராட்டம் நீடிப்பதை எந்தப் பிரஜை விரும்புவான்?

போராட்டத்தால் பட்டபடும் சஞ்சலம் சாதாரணமானதல்ல. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் வடபகுதி மக்களை எதிர்நோக்குவது உணவுப் பஞ்சம் என்று சொல்லப்படுகிறது. உயிர்ப்பஞ்சம், உடைமைப் பஞ்சம் தொடராமலிருக்கும் வழி எது? போராட்டம் தொடர்வதா அல்லது யுத்தநிறுத்தம், அதனைத் தொடர்ந்து சமாதானம் என்ற இவ்விரண்டிற்கும் பிரயத்தனம் செய்வதா?

இதுதான் இன்றைய அவசிய கட்டம்.

போரில் ஈடுபட்டிருக்கும் அரசும் தமிழ்த் தலைவர்களும் போராளிகள் தலைவர்களும் சிந்திக்கவேண்டிய விடயம் என்பது மடமை. பொதுமக்கள் அனைவரதும் அபிலாஷைகள் கணிக்கப்படவேண்டும்.

"அனைத்துலகையும் பெறுவதற்கு வெற்றிகண்ட போதும் ஒருவன் தன் ஆன்மாவை, தன் உள்ளொளியை இழப்பானாகில் அதனால் என்ன பயன்?" என்பது வேதவாக்கியம்.

சண்டைக்குத் தலைமை தாங்கும் தளபதியும், நாட்டை ஆளும் மன்னனும், தனிப்பட்ட முறையில் போராடுவதில்லை; இருப்பினும் 'யான்' 'எனது' என்ற பேராசை தத்தம் மக்களைப் பற்றி எழுவது இயற்கை.

இந்தப் பேராசை பொய்மானைத் தேடி அலைய இடமளிக்கும்.

இந்த உவமானம் இன்றைய இலங்கைக்கு முற்றும் பொருந்தாதென்றாலும், பொய்மானைத்தேடும் பயனற்ற முயற்சி இன்னும் தொடரலாமென்ற அச்சம் இந்நாட்டு மக்களைப் பீடித்திருப்பது மறுக்கமுடியாத உண்மை.

தமிழ் பயங்கரவாதத்தை முறியடிக்க அரசு எடுக்கும் முயற்சி எவ்வாறு வர்ணிக்கப்பட்டு வருகிறது?

"எங்கள் நாட்டுக்கு முன்னென்றுமில்லாத அபாயம் ஏற்பட்டிருக்கிறது. மக்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு தாய்நாட்டைக் காப்பாற்ற முன்வரவேண்டும்".

'எங்கள் நாடு' என்பது யாருடைய நாடு? 'மக்கள் அனைவரும்' என்பது எந்த மக்கள்?

இதனையிட்டே இன்று ஒருவித 'போர்' நீண்டுகொண்டிருக்கிறது.

தெளிவற்ற விடயத்தை தெளிவுபடுத்த போர் தவிர்க்க முடியாததென்று துணிந்தவர்கள் தமிழ் இளைஞர்கள். அவர்கள் போராளிகள் என்றால் அவர்களை எதிர்ப்பது இன்றைய அரசு; சிங்கள போராளிகள் அல்ல.

சிங்கள-தமிழ் போராக்க அரசும் அதன்பக்கபலமான பத்திரிகைகளும், வானொலியும் எடுத்த பிரயாசை பலனளிக்க வில்லையென்பது தெளிவு.

அரசுக்கெதிரான கெரிலா யுத்தம் இன்று உலகில் இங்குதான் நடைபெறவில்லை, ஆனால் இலங்கை ஒரு சமாதான வாழ்வுக்கு பழக்கப்பட்ட நாடு.

இந்தச் சூழ்நிலையில் எழுந்த போர் சம்பவங்கள் எதற்கும் கட்டுப்படாத நிலையில், இரு பகுதியினருக்கும் பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ்மக்கள் மத்தளம் போல இரு பக்கத்தில் அடி வேண்டிவந்தபோதும், நாம் இதுகாறும் பட்ட துன்பங்களுக்கு, பலனை எதிர்பார்ப்பதும் சமாதானத்தில் தாகங் கொண்டிருப்பதும் ஒரு நிலை.

இன்று பஞ்சாப் மாநிலம் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் புகட்டுவது தெருள் நோக்கு.

பாரதப்பிரதமரின் வெள்ளை உள்ளத்தை இலங்கை ஜனாதிபதியும் தமிழ்த்தலைவர்கள், போராளிகள் பிரதிநிதிகள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இந்த நிலைமையில் "போயின்"ஸை (Points) பட்டியல் போட்டு மீண்டும் போராடலாமா?

மலைநாடுகளில் றெயில்வே நிலையங்களில் காணப்படும் Pointsmanஐ' பஞ்சிமான்' என்றுமலையகமக்கள் சொல்வார்கள். புகையிரதத்தை நெறிப்படுத்த உதவும் தொழிலாளர்கள் அவர்கள்.

'வாழ்வா, தாழ்வா' என்ற நிலையில் 'பஞ்சிமான்' பொய்மான் என்பது தெளிவு.

### மின்னொளி இல்லை

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தை வீதி இரவில் மின்னொளியின்றி இருளில் மூழ்கியிருப்பதால் அவ்வழியால் பிரயாணம் செய்வோர் அடிக்கடி விபத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இப்பகுதிகளில் மின் வசதியிருந்தும் மின்கம்பங்களில் மின் குமிழ்கள் இணைக்கப்படுவதில்லையாம்.

அத்துடன் இருளைப் பயன்படுத்தி தற்போது அப்பகுதியில் சிறு கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெறுவதாகவும் அதனால் அவசர தேவைகளுக்குகூட இரவில் அவ்வழியால் செல்லமுடியாதுள்ளதென்றும் கூறப்படுகிறது. (ச)

### சைவமகாசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சைவ மகாசபையின் 69-வது மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 6-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சபைத் தலைவர் திரு. செ. தேவதாசன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் "சமயமும் சமூகமும்" என்னும் பொருள்பற்றி சொற்பொழிவாற்றுகிறார். (ச)

## உயர்நிலை மாணவர் ஒன்றியம்

## திருமலை அகதிகளுக்கு உணவு, பணம் அனுப்பினர்

(யாழ்ப்பாணம்)

திருமலையில் அகதிகள்முகாமில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு உயர்நிலை மாணவர் ஒன்றியம், சுமார் 50,000 பெறுமதியான உணவுப் பொருட்கள் ரொக்கப்பணம் ஆகியவற்றை அனுப்பிவைத்துள்ளது.

நேற்று நண்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து இவை, லொறி ஒன்றின்மூலம் அனுப்பப்பட்டது.

பொதுமக்களிடமும் வர்த்தகநிலையங்களிலும் பொது ஸ்தாபனங்களிலும் பாடசாலை மாணவர்களிடமும், பணமாகவும், பொருளாகவும் சேர்க்கப்பட்டு, முதல்கட்டமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சேகரிக்கப்பட்ட உடுப்புகள் ஆங்கில ஆயுர்வேத மருந்து வகைகள், அரிசி மா போன்ற 15,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது ரொக்கப் பணம் 35,000 ரூபாவும், அங்கு உடனடி தேவைகளுக்காக ஒன்றிய உறுப்பினர்கள் மூலம் அனுப்பப்பட்டது.

திருமலை முகாமில் உள்ள அகதிகள் நிலைமை பற்றி சரியான விபரம் எதுவும் கிடைக்காததினால் சேகரித்த முழுவதும் அனுப்பி வைக்கப்படவில்லை. (ச)

### மக்கள் கருத்து

### ஒலிபெருக்கி தொல்லை

பாடசாலைகள், மருத்துவமனைகள், பிரசவ விடுதிகள், உள்ள இடங்களிலும் நாளை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள், இரா மணவை செல்வங்கள் தங்கள் கல்வியில் ஈடுபட்டிருக்கும் பகுதிகளிலும் ஒலிபெருக்கிகள் காலை 7 மணி தொடக்கம் மறுநாட்காலை 8 மணியளவும் சில வேளை பல நாட்களாகவும் தங்கள் அறம் செயலை அடாத்தாகச் செய்வதை சமூக விரோதச் செயலா இல்லையா என்று நாம் சிந்திக்கவேண்டும். இன்று தமிழ் மக்கள் இவ்வித சித்திரவதைக்கு ஆயத்தமாக வுள்ளார்களா? தங்கள் சொந்தக் கிராமங்களிலேயே அகதிகளாக்கப்பட்டு, உணவும், உறையுளும் இன்றி வாழும் நிலையில் அதிகாலை 3 மணி வரை தொடர்ச்சியாக கீழ்த்தரமான பாடல்களின் ஒலி பரப்பைச் சகித்துக்கொண்டிருக்க ஆயத்தமாயுள்ளார்களா?

ஒரு குடும்பத்தின் குதூகலத்துக்காகவேண்டி முழுக்கிராமமுமே நித்திரையின்றி வேதனைப்படவேண்டுமா? அடுத்த நாள் அதிகாலை இப்பகுதி மக்கள் தங்கள் நாளாந்த வேலைக்குப் போகவேண்டாமா?

இந்த ஒலிபரப்பை இரவு 8மணியுடன் நிறுத்திக்கொண்டால் என்ன? முன்னர் பொலிஸில் அனுமதிபெற்று ஒலிபெருக்கி உபயோகித்தவர்கள் அதேபோல் குறிப்பிட்ட நேரத்துடன் அதை முடித்துக்கொண்டு, ஆயிரக் கணக்கான மக்கள் நிம்மதியாகத் தூங்க உதவினாலென்ன?

க. வேலுப்பிள்ளை
சரவெட்டி,

## மழைக்காலம் வருவதால்

## உணவுப் பொருட்களை சேமிக்கும்படி யோசனை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் உணவுப் பொருட்கள் போதிய அளவு சேமிப்பில் இல்லாது உள்ளது, மழைகாலம் ஆரம்பிப்பதால் கூடுதலாக மா, சீனி, அரிசி போன்ற பொருட்களை கப்பல் மூலம் கொண்டுவந்து சேமித்து வைக்கும்படி யாழ். அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா வலியுறுத்தியுள்ளார்.

யாழ் மாவட்டத்துக்கான அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் சம்பந்தமாக யாழ் அரசாங்கசெயலகத்தில் நடந்த கூட்டத்தில் உணவுத் திணைக்கள, கூட்டுறவுத் திணைக்கள, உரக்கூட்டுத்தாபன பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. இராமநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டம் தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் திரு. சிவமகாராசா சமர்ப்பித்த மற்றும் யோசனைகள் வருமாறு:

0 வடபகுதியில் இயங்கும் மக்கள் வங்கிகளின் சேவைகள் தற்சமயம் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதால் ப. நோ. கூ. சங்கங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே உணவுத் திணைக்களம் கடன் எல்லையைக் கூட்டவேண்டும். 0 உரக் கூட்டுஸ்தாபனம் முன்பு கடன் அடிப்படையில் ப. நோ. கூ. சங்கங்களுக்கு உரம் வழங்கியதை நிறுத்தியுள்ளது. மீண்டும் கடன் அடிப்படையில் வழங்கவேண்டும். 0 வடபகுதியில் தற்சமயம் விவசாய போகம் ஆரம்பித்துள்ளதால் அவர்கள் நிலத்தை பயன்படுத்தவோ மற்றும் வேலைகள் செய்யவோ எரிபொருட்கள் இல்லாது கஷ்டமடைகின்றனர். விசேட ஒழுங்குசெய்து எரிபொருள் பெற உதவவேண்டும். 0 உரம் போதியளவு இல்லாதுள்ளது கப்பல் மூலம் உரம்கொண்டுவர நடவடிக்கை எடுக்கவேண்டும்.

0 வடபகுதி மக்கள் முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி விவசாயத்திற்கு நம்பியுள்ளனர். அங்கு சுமுகமாக விவசாயம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். (மாவை-தி)

### தர்மர், ஆலால் நினைவாக மௌனப் பிரார்த்தனை

(மாவிட்டபுரம்)

முன்னாள் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் முன்னாள் கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோரின் ஆத்ம சாந்திக்காக மௌனப்பிரார்த்தனை ஒக்டோபர் 2ம் திகதி நடாத்தப்படவிருக்கிறது.

இருவரின் மறைவைகூரு முகமாக மௌனப்பிரார்த்தனை தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானத்திலும் யாழ் சட்டநாதர் ஆலயத்திலும் மற்றும் யாழ்நகரில் உள்ள ஆலயங்களிலும் நடாத்தப்படவிருக்கிறது. தமிழர் விடுதலை கூட்டணியின் ஆதரவாளர்களால் இப்பிரார்த்தனை நடாத்தப்படவிருக்கிறது.

# மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக மறியல் போராட்டம் தொடருகிறது

[யாழ்ப்பாணம்]

மக்கள் வங்கிக் கிளைகளின் முன்பாக மீண்டும் நேற்றுக் காலை அடகு வைத்தவர்கள் மறியல் செய்துள்ளார்கள்.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கிளையில் நேற்றுக்காலை ஐம்பதிற்கு மேற்பட்ட பெண்கள் வாசலில் இருந்து மறியல் செய்தனர் இதனால் வங்கி ஊழியர்கள் திரும்பிச் சென்றனர்.

யாழ். பிரதான வீதி, நவீன மார்க்கட், கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளைகளிலும் மற்றும் சகல மக்கள் வங்கிக்கிளைகளிலும்நேற்றுக்காலை மறியல் நடைபெற்றது. (ஈ)

## கூட்டுமுன்னணி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வார்த்தைகள் குறித்து இவர்கள் விரிவாக ஆலோசனை நடத்தினார்கள்.

இவ்விரு அமைப்புகளுக்குமிடையே இன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறுமென்று தெரிவிக்கப்பட்டது

பாதுகாப்புப் படையினருக்கும் தமிழ்ப் போராளிகளுக்குமிடையிலான சண்டை நிறுத்த உடன்பாட்டைப் பயனுள்ள வகையில் அமுல்செய்வதற்கான வழிவகைகள்பற்றியும், இந்த உடன்பாட்டு அமுலைக் கண்காணிக்க இலங்கை அரசு அமைத்திருக்கும் மூவர் குழுவுக்குப் பதிலாகச் சர்வதேசக் குழுவொன்றை அமைப்பதற்கான அவசியம் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது.

நேற்றைய பேச்சுக்களில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தலைவர்கள் கலந்துகொள்ளவில்லை.

இலங்கை இனப் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வைக் காணவகைசெய்யும் விதத்தில் சமரசப் பேச்சுக்களைத் தொடர்வது சம்பந்தமாகவும், அடிப்படைச் செயற்றிட்டம் குறித்தும் இப்பேச்சுக்களின்போது கலந்துரையாடப்பட்டது.

இதேவேளை,இத்தமிழ் அமைப்புகள் புதுடில்லி செல்வதற்கு முன்னதாகத் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனைக் கூட்டாகச் சந்திக்கவும் தீர்மானித்துள்ளன. (க)

## வேலைநிறுத்தப்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

நிறுத்தப் போராட்டத்தை பிற்போட்டுள்ளதாக, சங்கத் தலைவர் திரு நா. சின்னத்துரை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள ளவது:-

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்த அறிவித்தலின் எதிரொலியாக ஆறு தெரிவு செய்யப்பட்ட இயக்குநர்கள் நேற்று 30-ம் திகதிபிற்பகல் தங்கள் ராஜினாமாக் கடிதத்தை சங்கச் செயலாளரிடம் கையளித்ததையடுத்து கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்திற்கும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்பேச்சு வார்த்தையின்போது கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் யாழ். பல. நோ கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய இயக்குநர் சபையை சில தினங்களில் நியமிப்பதாகவும் அதன் பின் தொழிற்சங்கக் கோரிக்கைகள் ஆராயப்படுமென்றும் தெரிவித்தார். எனவே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விபரங்களை கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க அங்கத்தவர்களுக்கு அறிவித்தபின் போராட்டத்தை அதுவரை பின் போடலாமென கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் ஒப்புக் கொண்டது.'' (மா)

## 3வது பிறந்ததின வாழ்த்து!



### செல்வன் வேலாயுதம் தர்ஸ்கமன்

யாழ்ப்பாணம், கே. கே. எஸ். றோட், வேலாயுதம் மகேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் தர்ஸ்கமன் தனது மூன்றுவது பிறந்த தினத்தை இன்று (1-10-85) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா அண்ணைமார், அக்காமார், பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, சித்தப்பா, அன்ரி, மச்சாள்மார், மச்சான்மார் மற்றும், உறவினர் விநாயகர் அருள்பெற்று, பலகலைகளையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

ரி. வேலாயுதம்
708, கே. கே எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

1009

## வவனியா

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இறந்துள்ளதாகவும் மற்றுமொருவர் காயமடைந்துள்ளதாகவும், ரொக்கட் தாக்குதலினால் பொலிஸ் நிலையத்தின் முன்பகுதியும் அண்மையிலுள்ள சில கட்டிடங்களும் சேதமுற்றுள்ளதாகவும் அங்கு நிறுத்தப்பட்டிருந்த நான்கு வாகனங்கள் சேதமடைந்துள்ளதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

''அதிகாலையில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் அதிக அளவிலான தீவிரவாதிகள் பங்குகொண்டிருந்தனர். இவர்கள் வவனியா — கண்டி வீதியில் உள்ள மதகு ஒன்றின் சமீபத்தில் அமைக்கப்பட்டிருந்த மின் மாற்றுக் கருவியான ராஸ்ஸ்போமரைக் குண்டுவைத்துத் தகர்த்து விட்டனர். ரொக்கட்டுகள், கைக்குண்டுகள் மற்றும் ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலை மேற்கொண்ட தீவிரவாதிகள் மீது பொலிஸார் எடுத்த பதில்தாக்குதலை அடுத்து அவர்கள் பின்வாங்கியுள்ளனர். இந்தத் தாக்குதல் ஒருமணிநேரம் நீடித்தது.

தாக்குதலின் பின்னர் பொலிஸ் நிலையத்தின் அருகே மூன்று தீவிரவாதிகளின் சடலங்கள் காணப்பட்டன. பொலிஸார் ஒன்பது கைக்குண்டுகள், 17 கட்டு 'ஜெலிக் னைட்டுக்கள்' உட்பட பலரகப்பட்ட வெடிமருந்துகளையும் கைப்பற்றியுள்ளனர்'' என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது

வவனியா பொலிஸ் நிலையத் தாக்குதலின் போது பொலிஸ் கான்ஸ்டபிள் தோமஸ் (40 வயது) என்பவர் பலியானதாகவும், இரகசியப் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவருக்கு தலையில் காயமேற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைத்தொடர்ந்து இல அசம்பாவிதசம்பவங்களும் ஏற்பட்டன.

சுமார் 100 தீவிரவாதிகள் இத்தாக்குதலில் ஈடுபட்டதாகவும், ரொக்கட்டுகள் மோட்டார்கள் மற்றும் எறிகுண்டுகளையும் அவர்கள் பயன்படுத்தியிருப்பதாகவும். குண்டு வெடிச்சத்தம் மதவாச்சிவரைக்கும் கேட்டதாகவும் அதிகாரிகள் கூறினார்கள்.

## கொட்டும் மழையிலும்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நோக்குடன் மழை நீரில் தோய்ந்து நனைந்த வண்ணம் மாணவ மாணவிகள் சென்றுகொண்டிருந்தகாட்சி பரிதாபகரமாக இருந்தது.

நேற்று ஐந்தாவது நாளாக பாதயாத்திரை தொடர்ந்தது.

குப்பிளான் ம. வி. யிலிருந்து புறப்பட்ட பாதயாத்திரைக் குழு. குரும்பசிட்டி, பொன் பரமானந்தா வித்தியாலயம் வடக்குப் புன்னாலைக்கட்டுவன் ஊடாக வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் போய்ச் சேர்ந்தது அங்கு வித்தியாலய மாணவர்களால் தேநீர்விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. அங்கிருந்து பாதயாத்திரைக் குழு புறப்பட்டபோது அக்கல்லூரிமாணவர்களும் சேர்ந்து கொண்டனர் பின்னர் ஒட்டகப்புலத்தை அடைந்த போது அப்பகுதிமக்கள் மதியபோசனம் வழங்கினர்.

'நாமார்க்கும் குடியல்லோம்' வில்லிசை நிகழ்ச்சிஅங்கு இடம் பெற்றது ஏராளமான மக்கள் ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தனர்

பிற்பகல் நான்குமணியளவில் பாதயாத்திரைக் குழுவினர் ஒட்டகப்புலத்திலிருந்து புறப்பட்டு அச்சுவேலிச் சந்தியை அடைந்தனர். அங்கு லயன்ஸ் கழகத்தினர் வரவேற்று அழைத்துச்சென்றனர்.

பாதை ஓரங்களெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக நின்று தங்கள் ஆதரவைத் தெரிவிக்கும் முகமாக குளிர் பானம் வழங்கி வாழ்த்தினர்.

பிற்பகல் 6 மணிக்கு அச்சுவேலி மகாவித்தியாலயத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன

ஏழு மணிக்கு பத்தமேனி ஞானவைரவர் சனசமூக நிலையம் இராப்போசனம் அளித்து சிறப்பித்தது. அங்கு நிறைந்திருந்த மக்கள் மத்தியில் பாதயாத்திரைக் குழுவினர் மிகவும் களைப்படைந்த நிலையில் இருக்க காணப்பட்டனர். கடும் மழையில் நனைந்ததால்போலும் பல மாணவர்களுக்கு ஜலதோஷம் பிடித்திருந்தது.

மழையில் நனைந்தும் வெயிலில் உலர்ந்தும் கண்கள் பஞ்சடைந்த நிலையில் கை, கால்கள் சோர்ந்து விழுந்த நிலையில் மாணவ, மாணவிகள் காணப்பட்ட காட்சி கல்நெஞ்சையும் உருக்கியது.

திட்டமிட்டபடி இன்று நீர்வேலியை நோக்கி பாதயாத்திரை ஆறுவது நாளாகத் தொடரும். [மா]

## பெரும்பகுதி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் எட்டு இளைஞர்கள் 'புளொட்' இயக்கத்தினால் கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும், மேலும் இருவர் தேடப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

நேற்று நண்பகல் பொருட்கள் யாவும் இரு லொறிகளில் ஏற்றப்பட்டு யாழ். ஐந்து சந்திக்குச் கொண்டுவரப்பட்டதுடன்: இக்கொள்ளையில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் ஒருவரும் அங்கு கொண்டு வரப்பட்ட போது சுமார் ஆயிரம் மக்கள் அவ்விடத்தில் திரண்டனர்.

பொருட்கள் யாவும் தாறுமாறுகப் பெட்டிகள் உடைக்கப்பட்டுக் கிடந்ததினால் முஸ்லிம் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நான்கு அறைகளில் நிரப்பி வைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்களை கொழும்பிலிருந்து லொறிமூலம் பலர் அனுப்பிவைத்திருந்தனர்வெளிநாடுகளிலிருந்து வந்த சிலரின் பொருட்களும் அவற்றில் இருந்தன.

பொருட்களுடன் காணப்பட்ட ஒரு 'நோட்புக்கில்' சில பொருட்கள் 16,360ரூபாவிற்கு விற்கப்பட்டிருப்பதாக எழுதப்பட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இவைதவிர இரு டெக்குகள் விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மற்றும் பல பொருட்களைக் காணவில்லை என்று உரிமையாளர்கள் தெரிவித்தனர். காணமல் போன பொருட்களை மீட்டுத்தர 'புளொட்' உறுதியளித்திருப்பதாக கூறப்படுகிறது

சுல்தான் போக்குவரத்து நிருவனத்தினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது; ''கைதடியில் வைத்து இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் கடத்தப்பட்ட லொறியில் இருந்து அபகரிக்கப்பட்ட பொருட்களை மீட்டுத்தருவதில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளும், தமிழ் ஈழ மக்கள் விடுதலைக்கழகப் பிரதிநிதிகளும் தீவிர அக்கறைஎடுத்துக் கொண்டனர் கொள்ளையடிக்கப்பட்டபொருட்களின்பெரும் பகுதியினை தமிழீழ மக்கள் விடுதலைக்கழக பிரதிநிதிகள் மீட்டுள்ளனர்''

## விரைவில் தீர்வு

(மாலைதீவு)

''இலங்கை இனப்பிரச்னைக்கு வெகுவிரைவில் தீர்வு ஏற்படும் என்று மாலைதீவு ஜனாதிபதி மாமூன் அப்துல்கயூம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பொது நல அமைப்பு நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாடு மாலைதீவில் நடைபெறுகிறது. இம்மாநாட்டில் கலந்து கொள்ளச்சென்ற நிதி அமைச்சர் திரு ரொனி டி மெல் மாலைதீவு ஜனாதிபதியையும் அமைச்சர்களையும் நேற்று சந்தித்தார். அப்பொழுதே மாலைதீவு ஜனாதிபதி கயூம் இலங்கை இனப்பிரச்னை குறித்து கருத்து வெளியிட்டார்.

''இலங்கை இனப்பிரச்னைக்கு விரைவாகத் தீர்வு காண்பதன் மூலம் இப்பிராந்தியத்தில் ஸ்திரமான நிலையை ஏற்படுத்தமுடியும்'' என்று ஜனாதிபதி கயூம் கருத்து வெளியிட்டார்.

## மட்டு. தபாலகத்தில் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாக நுழைந்த ஆயுதம் தரித்த மூவர் உள்ளே சென்று, அங்கிருந்த ஊழியர்களைப் பயமுறுத்தி கொள்ளையிட முயற்சித்த போதிலும், தபாலகத்தில் பணமில்லாத காரணத்தினால் அவர்கள் அங்கிருந்து வெளியேறி விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின் போது தபாலதிபரோ அல்லது காசாளரோ இருக்கவில்லை.

## மட்டக்களப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதிகளில் நின்ற இளைஞர்களும், வீதிவழியாக வாகனங்களில் சென்ற இளைஞர்களுமே விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டனர்.

நேற்றிரவு ஆறரை மணிவரை இந்த 'முற்றுகை' நீடித்தது.

இதனால் மட்டக்களப்பு முழுவதுமே பெரும் பதற்றம் நிலவியது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து நேற்று மாலை முதல் மட்டக்களப்பில் மயான அமைதி நிலவியது

கைதானவர்களில் சுமார் மூந்நூறு பேர் நேற்றிரவு விடுவிக்கப்பட்டனர்.

## கடத்தப்பட்டு 14-வது நாள்!

★

வீடியோ பிரசாத் உரிமையாளர் திரு சே இராமநாதன் அவர்களை 18-9-85 இல் கடத்தி இன்றுடன் 14வது நாளாகிறது. இற்றைவரை இவரைக் கடத்தியவர்கள் யாரும் உரிமை கோரவில்லை இயக்கங்களின் முக்கியஸ்தர்களுடன் தொடர்புகொண்ட போதும் இன்றுவரை பலன் எதுவும் கிட்டவில்லை எமக்குத் தொடர்ச்சியாக வரும் அநாமதேயத் தொலைபேசிமூலம் கடத்தியவர்கள் தாம் புனிதமான இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், தமக்குக் குறிக்கப்பட்ட தொகைப் பணம் தரும்படியும் பயமுறுத்திக்கொண்டிருக்கிறார்கள் கடத்தியவர்கள் தம்மைப் புனிதமான இயக்கமெனக் கூறிக்கொள்வதனால் உண்மையான, புனிதமான இயக்கங்களை மாசுபடுத்திக்கொள்கிறார்கள். எனவே புனிதமான இயக்கங்கள் தங்கள் மேல் சுமத்தப்பட்ட களங்கத்தை இவரை விடுவிப்பதன்மூலம் நீக்கிக் கொள்வதோடு, இவரது இரண்டு குழந்தைகள் மனைவி, குடும்பத்தாராகிய எங்கள் துயரத்தைத் துடைத்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்,
இராமநாதன் குடும்பத்தினர்,
உற்றார், உறவினர், நண்பர்கள். (1010)

# "அகதிமுகாமிலிருந்த சிலரை சடலங்களாகப் பார்த்தோம்"

## வடக்கு நோக்கி வரும் திருமலை அகதிகள்

– கா. யோகநாதன் –

[4]

"ஈழத் தமிழனுக்கு 'அகதி' என்ற பெயர் நிரந்தரமாகிவிட்டது உலகில் ஈழத் தமிழன் இல்லாத நாடே இல்லை. அங்கெல்லாம் அவன் அகதியாவே வாழ்கிறான். அநேக நாடுகளில் அவன் அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளான்: இந்த நிலை எப்போதான் மாறப்போகிறதோ."

பஸ் பிரயாணத்தின்போது அருகில் இருந்த பிரயாணி ஒருவர் இப்படிக் கூறிப் பெருமூச்சுவிட்டது என் ஞாபகத்திற்கு வருகிறது.

கொழும்பு மாநகரிலே 58 77, 83 கலவரங்களுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதிகளாகினர். திருமலையில் இன்று 30 000 பேர் அகதி முகாம்களில் இருக்கின்றனர் முல்லைத்தீவில் 4 முகாம்களில் 5000 திருமலை அகதிகள். முல்லைத்தீவில் 14மற்றும் முகாம்களில் 5000 முல்லைத்தீவு அகதிகள் 10 மாதங்களாக முகாம்களில் இருக்கிறார்கள். மன்னாரிலுள்ள முகாம்களில் இரண்டாயிரம், வவுனியா செட்டிகுளம் அகதிகள். மட்டக்களப்பில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து அங்கும் ஆயிரக்கணக்கில் அகதிகள் கிளிநொச்சியில் 20,000 பேர் அகதிகள் பருத்தித்துறையில், ஊர்காவல்துறையில் இன்னும் பல இடங்களில் அகதிகள் ஈழத்தில் பல இடங்களிலும் தமிழ் அகதிகள் முகாமில்தான் வாழ்கின்றான்.

இந்தியாவில் பல இடங்களில் சுமார் ஒரு லட்சம் ஈழத் தமிழர் அகதிகளாக வாழ்கின்றனர். மற்றும் பல நாடுகளில் அகதிகளாக ஈழத் தமிழர் ஆயிரக்கணக்கில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

விடிவு ஏற்படாதா? முடிவு வராதா? தீர்வு பிறக்காதா? அமைதி நிலவாதா? என்று உலகெங்கும் அகதிகளாக வாழும் ஈழத் தமிழர் தினமும் வானொலியைத் திருப்புகிறார்கள். பத்திரிகைகளை புரட்டுகிறார்கள்.

உலகில் எதற்கும் முடிவு உண்டு. பாரதப் போருக்கு முடிவு வரவில்லையா? பஞ்சப்பிரச்னை தீரவில்லையா? விட்டதும் போர் முடிவுக்கு வரவில்லையா? என்று தமிழ் மக்கள் தினமும் தம்மைத் தேற்றிக்கொண்டு வாழ்கிறார்கள்.

அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கான அகதிகள், நம்பிக்கையைக் கைவிடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

முல்லைத்தீவு முகாம்களிலுள்ள திருமலை அகதிகள் தங்களுக்கு விடிவு வரும்; வழி பிறக்கும்; விமோசனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு வாழ்கின்றார்கள்.

வீரநகரைச் சேர்ந்த இளம் தம்பதிகள் தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை மாறிமாறிச் சொல்கிறார்கள். குடும்பத் தலைவிக்குத்தானே முதலிடம். அப்பெண் என்ன சொல்கிறார் பார்ப்போம்.

"3ம் தேதி இரவு நடந்த பிரச்னைகளால், 4ம் தேதிகாலை ஒரு கோஷ்டியினர் எங்கள் வீட்டிற்கு வந்து எல்லோரையும் வெளியில் வரும்படி கூப்பிட்டார்கள்.

"இங்கு ஒருவர்கூட இல்லை. நீங்கள் ஏன் இருக்கிறீர்கள்? உடனடியாக வெளியேறுங்கோ" என்றுகூறி கடற்கரைக்குக் கூட்டிச்சென்றனர். நாங்கள் செல்லும்போது வழியில் கடை முதலாளி ஒருவரும், வேறு ஒருவரும் டயரில்போட்டு எரிக்கப்பட்டிருந்ததைக் கண்டோம் நாங்கள் அழுதபோது 'வாயைப் பொத்துங்கோ' என்று கண்டபடி ஏசினார்கள் நாங்கள் காலை 8 மணிக்கு எங்கள் படகில் ஏறிக்கொண்டு நிலாவெளிக்குச் சென்றோம் அங்கு தொழில் ஒன்றும் செய்யவில்லை அங்கிருக்கும்போது மீண்டும் வந்தார்கள். நாங்கள் ஓடிப்போய் சூசையப்பர் கோவிலில் தஞ்சமடைந்தோம்."

அங்கு 10 குடும்பங்கள் வரை தங்கியிருந்தார்கள். அப்போது அவர்கள் வந்து கதவை உடைத்து வெளியே கூப்பிட்டனர். 'நீங்கள் ஏன் இங்கு இருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள்

"நாங்கள் அகதிகள் திருகோணமலையிலிருந்து அகதிகளாக வந்திருக்கிறோம். நாங்கள் அனாதைகள்; யாரும் இல்லை; எங்களுக்கு அடிக்காதீர்கள்' என்று மன்றாடினோம் தீவிரவாதிகள் இருந்தால் சொல்லுங்கள்' என்றனர்.

'தீவிரவாதிகள் யாரையும் நாம் காணவில்லை. நாங்கள் சாப்பாட்டிற்கு வழியில்லாமல் இங்கு சாகிறோம். இளநீரைக் குடித்துக்குடித்து. உணவின்றித் தவிக்கிறோம் என்றேன்.

உன்கணவன் 'கொட்டியாவுக்கு, உதவி செய்கிறவரா? என்று என் மனைவியிடம் சிங்களத்தில் கேட்டார்கள். கொட்டியா என்றால் என்ன நிறம் என்றுகூட எங்களுக்குத் தெரியாது. நாங்கள் அகதிகளாக வந்திருக்கிறோம்' என்று என் மனைவி கூறினார்.

அப்பொழுது பிள்ளைகளையும், என்னையும், மனைவியையும், வெய்யிலில் வைத்திருந்தார்கள் காலை 6 மணி முதல் மாலை 6மணிவரை வெய்யிலில் வாடித்தவித்தோம்.

'கோயில் பாதர் எங்கே? அவர் ஒரு கொட்டியா' என்றார்கள் அவரைத் தேடிப்பிடிக்கவேண்டும் என்றார்கள் எங்களுக்கு கோயில் பாதரின் பெயர் தெரியாது' என்றோம்.

பக்கத்திலுள்ளவரைக் கேட்டனர் அவர் பெயரைச் சொன்னதும் 'அவர்ஒரு கொட்டியா' என்றனர்

மீண்டும் மனைவி தொடர்கிறார் 'அவர்கள் நிலாவெளியைச் சேர்ந்த ஒரு கடைக்காரரிடம் சிகரட்பெற்றுக்கொண்ட பின் நீ கொட்டியாவுக்கு சிகரட் கொடுக்கிறாய்' என்று கூறி அடிக்கப்போனார்கள் அக்கடைக்காரரின் மனைவியும், பிள்ளைகளும் அடிக்கவேண்டாம் என்று சொல்லி அழுதார்கள்,

கணவர் மீண்டும் கூறுகிறார்:

"அவர்கள் கோயில் பாதரின் அறைக்குள் சென்று தேடுதல் நடத்தி ஒரு சின்னக் கத்தியைக் கொண்டு வந்தார்கள்.

இளநீர் பிடுங்கித்தரும்படி கேட்டனர் எனக்கு மரம் ஏறத்தெரியாது என்றேன். மரம் ஏறத்தெரிந்தவர்கள் யாரும் இருக்கிறார்களா? என்று கேட்டார்கள். பக்கத்திலே துரைநாயகம் என்ற பெடியன் நின்றார் அவருக்கு 35 வயது இருக்கும் திருமணமாகாதவர் அவருக்கு இளநீர் பறிக்கத்தெரியும் என்றார் அவரைக் கூட்டிச் சென்று பக்கத்திலுள்ள மரங்களிலெல்லாம் இளநீர் பிடுங்கி வெட்டிக்குடித்துவிட்டு 'நீயும் ஒரு கொட்டியா' என்று கூறி பின்னர் அவரையும் கூட்டிச் சென்றனர்.

அதன்பின் சாப்பாடு இல்லை பிள்ளைகள் பசியால் துடித்துக் கொண்டிருந்தனர். மாலை 6மணியாகிவிட்டது எங்கும் ஒரே வெடிச்சத்தங்கள் என்னையும் சுட்டுக்கொல்லப் போகிறார்கள் என்று பதைத்தேன். என்பிள்ளைகள் என்னைக்கட்டிப் பிடித்து 'அப்பா பசிக்குது பசிக்குது' என்று கதறிக் கதறி அழுதார்கள் இதைப்பார்த்த அவர்கள் என் மகனைத் தூக்கி 'கொட்டியா' 'சின்னக்கொட்டியா' என்று கையைத் தூக்கிப் 'புலிக்குட்டி' என்று கூறி பிள்ளைகளைக் கதறவைத்தார்கள் எனக்கு சரியான ஆத்திரம் வந்தது. பொறுமையாக இருந்தேன், பின் அவர்கள் சென்றுவிட்டனர்.

ஏழரை மணி மட்டும் பயத்தினால் உள்ளே இருந்தோம். எந்நேரமும் கவச வாகன ஓசையும், பீரங்கிவெடிச் சத்தமும் கேட்டன நான் மனைவியையும், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு கொச்சி தோட்டத்தினுள் புகுந்த போகும் போது சில சடலங்களை கண்டேன்

கோவில் அருகிலுள்ள அகதி முகாமிலிருந்த எனக்கு தெரிந்த சிலர் இறந்துகிடந்தார்கள். நானும் மனைவியும் பிள்ளைகளும், சடலங்களுக்கு மேலாக மெதுவாகத்தவழ்ந்து சென்றோம் அப்போது இளநீர்பறித்து வெட்டிக்கொடுத்த துரைநாயகத்திற்கு மேலாகவும் தவழ்ந்து சென்றோம் அவரை எனக்கு நன்கு தெரியும் அதற்கு அப்பால் ரவி என்று ஒருவர் இறந்துகிடந்தார். நங்கள் கடற்கரை நோக்கி சென்றோம்

மனைவி தொடர்ந்து கூறுகிறார்: 'விடிந்ததும் ஒரு பிளாஸ்டிக் படகில் 3 எரிந்த சடலங்களைப் பார்த்தோம். அந்த நேரத்தில் இனியும் இங்கே இருக்கக் கூடாது என நினைத்து கால்நடையாக காட்டுப்பாதை வழியாக ஐந்தாறு நாள் சாப்பாடின்றி கவலைப்பட்டு தவித்து முல்லைத்தீவு வந்துசேர்ந்தோம்" (தொடரும்)

## கிராம மக்களுக்கு——

# வலுவை ஊட்டுவதற்கு சங்கங்கள் அவசியம்

[யாழ்ப்பாணம்]

"இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பதட்டமான சூழ்நிலைகளின் மத்தியில் ஒரு தனி மனிதன் தனது சொந்தப் பணிகளைச் செய்துமுடிப்பதே மிகப் பெரும் கஷ்டமாகும். அப்படி இருந்தும்கூட கோப்பாய்க் கிராம மக்களின் விடாமுயற்சியின் காரணமாக இன்றைய இவ் வருடாந்தக் கூட்டம் சிறப்புடன் நடாத்தப்படுவது மிகவும் பாராட்டுக்குரியதாகும்"

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்குச் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய கோப்பாய் தெற்கு கிராமசேவை அலுவலர் திரு எஸ். யோகலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில், இளைப்பாறிய அதிபரும், மேற்படி சங்கத் துணைத் தலைவருமாகிய திரு. எஸ். சபாரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. யோகலிங்கம் தொடர்ந்து பேசுகையில்,

ஒவ்வொரு கிராம மக்களின் மத்தியிலும் வலுவை ஊட்டுவதற்கும், பலவிதமானதேவைகளை நிறைவு செய்வதற்கும் இதுபோன்ற சங்கங்கள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்

வருடாந்தப் பொதுக்கூட்ட முடிவில் நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு எஸ். சபாரத்தினம், துணைத் தலைவர்கள்: திரு ஏ. மயில்வாகனம், திரு கே எஸ். அழகரத்தினம், செயலாளர்: திரு எம் கே இளையப்பு துணைச்செயலாளர்: திரு எஸ் இராசையா, பொருளாளர்: திரு. ஏ. உலகநாதன், கணக்காளர்; திரு கே பி. வரதகுலசிங்கம், ஒன்பது பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

# இன்றைய பலன்

மாதம்- புரட்டாசி
திதி- 14 (1-10-85)
கிழமை- செவ்வாய்
திதி துதியை
நட்சத்திரம்- அச்சுவினி

மேடம்: பகைமை உங்களை வேதனைப்படுத்தும், உடல் நலமும் பாதிக்கப்படலாம், நம்பிக்கை மோசடியும் நடக்கும், தொழில்துறையில் கவனம் வேண்டும்

இடபம்: ஸ்திர வழியாலும் பொருள் சிறப்பிற்கிடமுண்டு. நன்மையான திருப்பங்களும் இடம்பெறும். குடும்பத்தலைமையும் இவருக்குக் கிடைக்கலாம்.

மிதுனம்: ஏக்கத்திற்சாயல் இன்று எதிர்பாராத சிக்கலில் மாட்டிவைக்கும். மாணவர் மத்தியில் அதிருப்தி காணப்படும், குடும்பப்பிரச்னைகளும் தலைதூக்கி நிற்கும்,

கடகம்: தாய்வழித் தனமும் உண்டு. தன்தொழில் சிறப்புமுண்டு. புதுமையான சம்பவங்களும் இடம்பெறலாம், கொள்வனவு செய்வதற்கு இன்று நன்னாள்.

சிம்மம்: எண்ணம் இன்று நிறைவேறலாம், சிநேகிதர் வழியாலும் உதவி கிட்டும். புத்திரர் பெருமையுமுண்டு: சமூகத்திலும் மதிப்பு உயரும்;

கன்னி: சித்தனைதாக்கும், சீறிவரும் கோபம் திண்டாட வைக்கும், எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்பட வைக்கும்

துலாம்; பிரம்மச்சாரிகள் வாழ்வில் காதல்கணை தாக்கும், சிலருக்கு மணவாழ்வும் கிட்டும், தொழில் விருத்தியுண்டு. சிறப்பான தினம்.

விருச்சிகம்: விரக்திமனப்பான்மை தோன்றும். கொடுக்கல் வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக் கொள்ளுவீர்கள். எதிர்பாராத விளைவுகளுக்குமிடமுண்டு, அவதானம் வேண்டும்

தனுசு- தந்தைவழி ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் புண்ணிய யாத்திரையும் மேற்கொள்ளப்படலாம், வெளியூர் செய்தியும் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும், திருப்திகரமான தினம்.

மகரம்- பூமியால் லாபம், புண்ணியவிருப்பும் மேலிடும், பொருள்வரவுமுண்டு, பொதுசனமதிப்பு முண்டு.

கும்பம்- பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள், நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் கிடைக்கும், கலைஞர்கள் போற்றப்படுவார்கள், குடும்ப சுமுகமுண்டு

மீனம்- இயந்திரங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும். வாழ்விலும் தடுமாற்ற நிலை தென்படும். தொழில்மாற்ற நிலையுமுண்டாம்.

திருமலை
வே. ரவிந்திரன்

## டாக்சி கடத்தப்பட்டது

(வவுனியா)

கொழும்பிலிருந்துவந்த தனியார் டாக்ஸி ஒன்று வவுனியாவில் வைத்து கடத்தப்பட்டுள்ளது.

மன்னார் வீதி நெளுக்குளத்திற்கு அருகாமையில் இச்சம்பவம் நடந்தது.

முஸ்லிம் ஆட்கள் சிலர் இந்த டாக்ஸியை கொழும்பிலிருந்து வாடகைக்கு அமர்த்தி வந்திருந்தனர் ஆண்டியாபுளியங்குளம் சென்ற போது மேற்படி இடத்தில் வைத்து இனம் தெரியாத சில இளைஞர்களினால் டாக்ஸி கடத்திச்செல்லப்பட்டது அதல் பிரயாணம் செய்தவர்கள் இறக்கிவிடப்பட்டனராம்.

DAY CLASS
2-ம் பிரிவு
ஆரம்பம்: 10-10-85 காலை 8 00மணி
(எமது வழமையான ஆசிரியர் குழுவினுல்)
Pure and Applied Maths திரு. நல்லையா
விபரங்களுக்கு:
NEW MASTER INSTITUTE
BMC LANE, JAFFNA.

## மகளிர் கல்லூரி இல்லப்போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி க. ஆறுமுகதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இல்லப் போட்டியில் விளையாட்டுத்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வி. கணேசலிங்கமும் கலந்துகொள்வார்.

விக்ரோரியா மினி
10-30, 2-30, 4-45, 7-00
TORSO
பயங்கரம், திகில் கொலை வயதுவந்தவர்கள், மட்டும்

உஷா மினி
10 30, 2-30, 4-45, 6-45
DEADLY COMMANDO
பிலிப்பைன்சில் தேர்ச்சி பெற்ற கொமாண்டோ குழு, கொரில்லாக்களுடன் சேர்ந்து, கிளர்ச்சிக்காரர்கள் மீது மேற்கொள்ளும் அதிரடித் தாக்குதல்கள்.
(மிகப்புதிய வெளியீடு)

ராணி மினி
"X" தரைவாணி
10-30, 12-30, 2-30
4-30, 6-30
Chained Heat
அமெரிக்க பெண்களின் மறியல் வாழ்க்கையை சித்தரிக்கும் படம்

இன்று மட்டும்
எம்பயர்
(வைத்தீஸ்வரா சந்தி)
7 அடித் திரையில்
தினசரி 10-30, 2-30, 6-30.
விஜயகாந்த், கார்த்திக், அம்பிகா நடித்த விசுவின்
"புதிய சகாப்தம்"
இரவு 9-00 மணி
"ZWEI FAUSTE WIEEIN ORKAN
புதிய கராட்டிப் படம்

வெலிங்டன்
10-30, 2-30, 6-30.
சரத்பாபு - சுமதி நடித்த
சுவரில்லாத சித்திரம்
[கலர்]

[illegible]
10-30, 2-30, 6-30
[illegible], பூர்ணிமா நடித்த
நீங்கள் கேட்டவை
[illegible] கலர்

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 6-30
கமலகாசன், ரஜனிகாந்த் அமிதாப்பச்சன், மாதவி பூனம் தில்லான்
Geraf Taar
V.G.P.
பயங்கர சண்டைகள் இனிய பாடல்கள் நடனங்கள்.
இந்தியாவில் 175 நாட்களுக்கு மேல் ஓடியபடம்!

## பொன்னாலை பெருமாள் கோவில் வழிபடுவோர் சபைக்கு உதவி அரசஅதிபர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

"கடந்த ஒருவருட காலத்தில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் வழிபடுவோர்சபை அடைந்த வளர்ச்சியும் செயற்படுத்திய நற்திட்டங்களும் பாராட்டப்பட வேண்டியன. சபையினரின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும், தன்னலமற்ற சேவையுமே இவ்வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன. தற்போது இச்சபையினர் ஆலயத்திற்கு பூந்தோட்டம் அமைக்கும்பணியில் ஈடுபட்டுள்ளனர். அப்பணிக்கு சகலரும் உதவி புரியவேண்டும். மேலும் இச்சபை வளர்ச்சியடைந்து ஆலயத்திற்கும் அடியார்களுக்கும் பேருதவி புரியவேண்டும்."

இவ்வாறு அண்மையில் திரு க. கனகசபை தலைமையில் நடைபெற்ற பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வழிபடுவோர் சபையின் முதலாமாண்டு பொதுக்கூட்டத்தில் சங்கானை உதவி அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கல்லூரி அதிபர் திரு க. அருணாசலம் உரையாற்றுகையில் இவ்வாறான பிரபலமான பழமைமிக்க ஆலயங்களின் அதன் வரலாற்றை அறிந்துகொள்ளக் கூடியதாக ஆலயத்தின் வரலாறு, மகிமை போன்றவற்றைத் தயாரித்து வைத்துக்கொள்வதற்கு இதுபோன்ற சபைகள் அவசியமானவை என வலியுறுத்தினர். மேலும் பலர் உரையாற்றினர்கள்.

இக்கூட்டத்தில் சபையின் நோக்கங்களும், திட்டங்களும் தலைவரால் விளக்கப்பட்டதோடு ஆண்டுக் கணக்கறிக்கையும், செயலாளர் அறிக்கையும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. பதவி விலகிய நிர்வாகசபை உறுப்பினர்களுக்குப் பதிலாக இருவரர்கள் [illegible]. கிருஷ்ணர், வி. இராஜகுமார், அ. நாகலிங்கம், மு. சபாரத்தினம், சிவஞானம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இக்கூட்டத்தில் ஆலயத்திற்கென பூந்தோட்டம் அமைக்கும் பணியில் நிதிசேகரிக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டதுடன் இந்நிதிக்கு உதவ விரும்புவோர் மேற்படி சபையுடன் தொடர்புகொண்டு தமது அன்பளிப்புக்களை வழங்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## ஆள்கடத்தலைக் கண்டித்து நடைபெற்ற ஹர்த்தால்

(யாழ்ப்பாணம்)

ஆள்கடத்தலைக் கண்டித்து நேற்று யாழ். நகரில் வர்த்தக நிலையங்கள், கடைகள் பூட்டப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் நகரிலுள்ள மொத்த விற்பனை வர்த்தக நிலையங்கள், ஜவுளி நிலையங்கள், யாழ். நவீன மார்க்கட் கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன.

சில ஸ்ருடியோக்கள், தேநீர்க் கடைகள், மருந்து விற்பனை நிலையங்கள், சைக்கிள் கடைகள், சில அலங்காரிப்பு நிலையங்கள் மட்டும் திறந்திருந்தன.

ஆஸ்பத்திரிவீதி, கஸ்தூரியார்வீதி, ஸ்ரான்லிவீதி, கே. கே. எஸ் வீதி, மின்சார நிலையவீதிக் கடைகளும், வெற்றிலைபாக்கு கடைகள், பாய்க்கடைகளும் மூடப்பட்டிருந்தன.

வழக்கம்போல் பெரியகடை மரக்கறி மார்க்கட் திறந்திருந்தது. வாடிக்கையாளர்கள் குறைவாகக் காணப்பட்டனர்.

நகரில் உள்ள அநேக முஸ்லிம் வர்த்தகர்களின் கடைகளும் பூட்டப்பட்டிருந்தன.

கடத்தப்பட்ட வீடியோ பிரசாத் நிர்வாகி எஸ். இராமநாதனை விடுதலை செய்யும் வரை கடையடைப்புச் செய்து பூரண ஹர்தால் நடத்துமாறு யாழ் வர்த்தக சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்திருந்ததைத் தொடர்ந்து இந்த ஹர்த்தால் நடைபெற்றது.

## சோவியத்அதிபர் கோபர்ச்சோ பிரான்சுக்கு விஜயம்

(மாஸ்கோ)

சோவியத் தலைவர் திரு. மிக்கையில் கோபர்ச்சோ நாளை பிரான்சுக்கு உத்தியோக விஜயமொன்றை மேற்கொள்கிறார்.

இவரது பிரான்ஸ் விஜயத்தின்போது ஐரோப்பாவின் கிழக்கு-மேற்கு உறவுகள்பற்றி முக்கியமாக ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. சோவியத் தலைவரின் இந்த பிரான்ஸ் விஜயம் 'நேட்டோ' நாடுகளுடன் சோவியத்யூனிய உறவுகளை வளர்த்துக்கொள்ள எடுத்திருக்கும் நடவடிக்கை எனக் கருதப்படுகிறது.

சோவியத் யூனியனின் தலைமைக்காரியதரிசியாக கோபர்ச்சோ பதவி ஏற்ற பின்னர் அவர் மேற்கொள்ளும் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

## கார் கடத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ் இரண்டாம் குறுக்குத் தெருவிலுள்ள வீடொன்றிலிருந்து காரொன்று இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக காரின் உரிமையாளர் யாழ் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

(ச)

## மீண்டும் இன்று 'மலரும் புதுயுகம்'

[யாழ்ப்பாணம்]

யாழ். முற்போக்கு கலாமன்றத்தின் "மலரும் புதுயுகம்" என்னும் நாடகம் மக்களின் ஏகோபித்த வேண்டுகோளுக்கிணங்க இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் மேடையேறவிருக்கிறது.

பல முற்போக்கு கருத்துக்களைக்கொண்ட இந்நாடகம் முன்னரும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. [ச]

## முதலிடம் பெற்றது

(சுண்டுக்குளி)

யாழ் மாவட்ட கிரேஷ்ட பாடசாலைகளுக்கிடையே யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட மாவட்ட உடற்பயிற்சிப் போட்டியில் நவாலிமகா வித்தியாலயம் 13 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கான போட்டியில் முதலிடம்பெற்றுள்ளது.

13 வயது ஆண்டுகளுக்கான போட்டியில் சுதுமலை சிற்மய பாரதிவித்தியாசாலை முதலிடத்தைப் பெற்றுள்ளது.

## ரூபவாஹினி

மாலை
5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன் நிகழ்ச்சி.
5-30 'மை பிரண்ட் பிளிக்கர்'.
6-00 விளையாட்டுப் பயிற்சி
6-15 'ரடின் தொட்டில்' (சிங்களம்)
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 இசை நிகழ்ச்சி.
7-25 'சிட்ஸ்'
8-00 செய்திகள் (சிங்களம்)
8-20 'சிப்ஸ்' தொடர்ச்சி
8-40 'சித்சரா' சிங்கள நிகழ்ச்சி
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 'த விவன்ஸ்'
10-10 ஒளிபரப்புமுடிவு.

## அபிவிருத்தி உத்தியோகத்தர்

(யாழ்ப்பாணம்)

சண்டிருப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தராக திரு ஏ. சிவராசா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமை யாற்றியவரென்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## யாருடையது?

கொக்குவிலைச் சேர்ந்த திரு. தேவகுமார் என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை சென்ற மினி ஸ்ஸில் கண்டு எடுத்த இரண்டு திறப்புக்களை ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார். உரியவர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## மாதர் பேரணி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடை சிறையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் பற்றிய விபரக்கொத்தொன்றினை, மாதர் மறுமலர்ச்சிப் பேரணியினர் வெளிநாடுகளிலுள்ள சுமார் 200 பெண்கள் ஸ்தாபனங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

தமது வெளிநாட்டுப்பிரதிநிதிகளுக்கூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த விபரக்கொத்தில் உண்ணாவிரதிகளுக்கு ஆதரவான பாராட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள், அறிக்கைகள் ஆகியவை அடங்கும்

## லொறிமீது கல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

மதவாச்சிக்கு சமீபத்திலுள்ள புனேவ என்ற இடத்தில் சோடா ஏற்றிச்சென்ற லொறி மீது கற்கள் வீசப்பட்டதால் சாரதி காயமடைந்தார்.

லொறி வீதியை விட்டு விலகிச்சென்றதைத் தொடர்ந்து சாரதியும் கிளீனரும் இறங்கி தப்பிச்சென்றனர். மற்றொரு லொறியும் அ பகுதியில் சேதமடைந்த நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. (ச)

## சங்கானை ஏ ஜி.ஏ. பகுதியில் உணவு முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வறுமை நிவாரணத் திட்டத்தின் கீழ் உணவு முத்திரை பெறுபவர்களுக்கான "அ" படிவங்கள் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சகல கிராம சேவையாளர் பிரிவிலும் விநியோகிக்கப்படுவதாகவும் அவ்விண்ணப்பப் படிவங்கள் இம்மாதம் 5ம் திகதி சனிக்கிழமை வரையுமே விநியோகிக்கப்படுமெனவும் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு து. வைத்திலிங்கம் அறிவித்துள்ளார்.

'அ' படிவங்களைப் பூர்த்தி செய்தவர்கள் அவற்றை உதவி அரசாங்க அதிபரினால் நியமிக்கப்பட்ட வறுமை நிவாரணக் குழுவிடம் ஒப்படைத்து 'அ' படிவங்களை எதிர்வரும் 7ம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாமெனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

## விவசாய கருத்தரங்கு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றம் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் விவசாயக் கருத்தரங்கு இன்று செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது

திரு பொ செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் யாழ். விவசாய உதவிப் பணிப்பாளர் திரு ச கிருஷ்ணபிள்ளை, கால்நடைச்சேவைகள் உதவி ஆணையாளர் திரு க பரமலிங்கம், பயிர்க் காப்புறுதி உதவிப் பணிப்பாளர் திரு எஸ். சிவகுரு, விவசாயப் போதனாசிரியர் ஜி ரி. சோமநாதர், தொழில் அதிபர் திரு க. கனகராசா ஜே பி உட்பட பலர் கலந்து கொள்வார்கள்.

2-வது ஆண்டு நினைவஞ்சலி

உயர்திரு இராஜரட்ணம் துரைசிங்கம்

(முன்னாள் விளம்பர உதவி முகாமையாளர், லேக்கவுஸ்)

மண்ணுலகில்: 08-10-1932 விண்ணுலகில்: 25-09-1983

அன்பின் உருவே! பாசத்தின் சிகரமே!!

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பேரொளி வீசி எம் அனைவரையும் அன்புடன் நேசித்து எமையெல்லாம் உயர வைத்த எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் மறைந்து இரண்டாண்டென்ன ஈராயிரமாண்டு சென்றாலும் உங்கள் சிரித்த முகமும் பண்பு நிறைந்த குணமும் எங்கள் நெஞ்சைவிட்டு என்றும் நீங்காது.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்;
அன்பின் மனைவி, மகன் சுரேஸ், உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள்.

(996)

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY


# "பாதுகாப்பை பலப்படுத்த 1லட்சம் ராணுவவீரர் தேவை"

## அமைச்சர் லலித் கருத்து

(பொல்காவலை)

'நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஒருலட்சம் இராணுவ வீரர்கள் தேவை' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

பொல்காவலையில் நடைபெற்ற மாபெரும் பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்ட கருத்தை அமைச்சர் வெளியிட்டார்.

"நாட்டில் சமாதானம் அமைதி நிலைநாட்ட, பந்தோபஸ்தை பலப்படுத்தவேண்டும். இராணுவத்தில் தற்போது ஆறாயிரம் வீரர்களே இருக்கிறார்கள். இராணுவப் பிரிவில் ஒருலட்சம் பேராவது இருக்கவேண்டும். இதன்மூலமே பாதுகாப்பை உறுதிசெய்ய முடியும்" என்றும் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

## கடத்தப்பட்ட லொறி

# நெல் மூடைகளுடன் பொலிஸாரால் மீட்பு!

(வவுனியா)

மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த காரைநகர் ஏகாம்பரம் என்பவருக்குச் சொந்தமான லொறியொன்று 140 மூடை நெல்லுடன் மூன்று முறிப்பு என்ற இடத்தில் இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டது.

இச்சம்பவத்தின் போது லொறியில் பயணம் செய்த சாரதியும், கிளினரும், இன்னுமொருவரும் பலமாகத் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது. சாரதியும், மற்ற இருவரும் தாக்குதலுக்கிடையிலும் ஓடி ஒழித்து வவுனியா வந்து சேர்ந்தனர்.

வவுனியாப் பொலிஸில் இச்சம்பவம் பற்றி புகார் செய்யப்பட்டதும், சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் தேடுதல் நடத்திய பொழுது அடர்ந்த காடு ஒன்றுக்குள் லொறியை கண்டு பிடித்தனர்.

லொறியில் இருந்த நெல் மூடைகளில் 80 நெல் மூடைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தனவாம்.

கடத்தப்பட்ட இந்தலொறி வவுனியா பொலிஸ் நிலையத்தில் இப்பொழுது பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. (து)

## கலை, விஞ்ஞான தேர்வு 30-ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடங்களுக்கும், விஞ்ஞான பீடங்களுக்குமான 1985-ம் ஆண்டுத் தேர்வுகள் இம் மாதம் 30-ம் திகதி தொடங்கும்.

தேர்வுகள் யாவும் முன்னர் இறுதியாக அறிவிக்கப்பட்ட அட்டவணை ஒழுங்கின்படி நடைபெறும்.

பிற்போடப்பட்ட இராமநாதன் நுண்கலைப்பிரிவு தேர்வுகளும், பிற்போடப்பட்ட முதலாம் ஆண்டு கலைப்பீடத் தேர்வுகளும் மேலே குறிப்பிட்ட தேர்வுகளுடன் அக்டோபர் 30-ம் திகதியிலிருந்து நடைபெறும்.

தேர்வுகளுக்கான நேர அட்டவணைகள், தேர்வுக் கிளை அலுவலகத்தின் பலகையில் வெளியிடப்பட்டிருக்கும் என்று யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் திரு க. வித்தியானந்தன் அறிவித்துள்ளார்.

## திருமலையில் 400 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை தேடுதல் வேட்டையில் பெண்கள் உட்பட 400 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளனர் என்பதுபற்றி எதுவும் தெரியாதிருப்பதாகவும் "ஈழம் செய்திப்பலகை" சுவரொட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்.) வெளியிட்டுள்ள இச்சுவரொட்டியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. வவுனியா வில் முப்படைகளும் அட்டகாசம்.

## 'எஸ்மன்ட்' காலமானார்

(கொழும்பு)

இலங்கையின் முதபெரும் பத்திரிகையாளரும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வெளியுறவு ஆலோசகருமான திரு எஸ்மன்ட் விக்கிரமசிங்க (65 வயது) நேற்று முன்தினம் நியூயோர்க்கில் காலமானார்.

இவரது உடல் இறுதிக்கிரியைகளுக்காக இலங்கைக்கு கொண்டுவரப்படவுள்ளது.

சர்வதேச பத்திரிகையாளர் நிலையத்தின் தலைவரான இவர் இலங்கையின் கல்வி இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவின் தந்தையாவார்.

# மூன்றுசம்பவங்கள் மூன்று பேர் பலி

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் நடந்தமினிபஸ் விபத்தில் ஆனைக்கோட்டையைச்சேர்ந்த வி. இரசேஸ்வரன் (30-வயது) பலியானார்.

ஃ ஃ ஃ

யாழ் தட்டாதெருவில் நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் தாவடியைச் சேர்ந்த ஆர். பாஸ்கரன் பலியானார்.

ஃ ஃ ஃ

கரம்பனைச்சேர்ந்த அன்ரன் சவரிமுத்து (5-வயது) கடையில் வேலைசெய்துகொண்டிருந்தபோது மின்சாரத்திற்கு பலியானார். (ஏ)

## இன்று முதல் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதினொரு கிராம சேவையாளர்கள் பகுதிகளில் புதிய உணவு முத்திரைக்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று செவ்வாய் கிழமை முதல் வழங்கப்படவுள்ளன.

கிராம சேவையாளர் அலுவலகங்களில் இப்படிவங்களைப் பெற்று ஒரு வாரகாலத்திற்குள் பூர்த்தி செய்து கிராம சேவையாளர்களிடம் ஒப்படைக்குமாறு பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

## இரு இளைஞர்களுக்கு குற்றப்பத்திரம்

(கொழும்பு

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் குறித்து பொலிசாருக்குத் தெரிவிக்கத் தவறிய குற்றச்சாட்டின்பேரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட மூதூரைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தேவராசா அல்லது நிலவு என்ற இளைஞருக்கு குற்றப்பத்திரம் வழங்கப்பட்டு விசாரணை நவம்பர் 11-ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தேவராசா கோடப்பழம் என்ற இளைஞர் மீது அனுமதியின்றி துப்பாக்கி வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் இதே நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் வழங்கப்பட்டது. மேல் விசாரணை நவம்பர் 28-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீதிபதி திரு. எச். டபிள்யூ. சேனநாயக்கா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட இரு இளைஞர்கள் சார்பிலும் சட்டத்தரணி திரு எப். எக்ஸ். சேவியர் ஆஜரானார்.


## மரண அறிவித்தல்

### திருமதி விக்கினேஸ்வரி சிவானந்தராசா

காரைநகர் நாகம்மா கோவிலடியைச் சேர்ந்த திருமதி விக்கினேஸ்வரி 29-09-85ல் காலமாகிவிட்டார். இவர் சுன்னாகம் மின்சார அத்தியட்சகர் சிவானந்தராசாவின் அன்பு மனைவியும், தஷி, துவாரகன், துஷியந்தி ஆகியோரின் அன்புத்தாயாரும், வே. ச. சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகளுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 30-ந்திகதி நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்றது.

997 திரு. T சிவானந்தராசா

## மரண அறிவித்தல்

### மலுங்கு முஸ்தபா

சுன்னாகத்தை இருப்பிடமாகக்கொண்டவரும் பிரபல இறைச்சி வர்த்தகருமான மலுங்கு முஸ்தபா 30-9-85 அன்று காலமானார். இவர் ஆயிஷா மரியத்தின் அன்புக்கணவரும், ஃபாரூக் திஸ்தார், ஸுபைதா, மகரிபா, முகமது அலி (ஜேர்மனி), பௌஸியா ஆகியோரின் அன்பு வாப்பாவுமாவார். அன்னாரது ஜனாஸா 1-10-85 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ்ப்பாணம் சின்னப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:- எம். ஃபாருக்,

செல்லாச்சியம்மையார் ஒழுங்கை,

சுன்னாகம். 1008

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னையா அன்னப்பிள்ளை

மீசாலை தெற்கைச் சேர்ந்த திருமதி பொன்னையா அன்னப்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் முத்து பொன்னையாவின் (கிராம முன்னாள் தலைமையாளர் ப. நோ. கூ. ச. சாவகச்சேரி) அன்புத் துணைவியாரும் கமலேஸ்வரி (ஆசிரியை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), மயூரன் (மாணவன் இந்துக் கல்லூரி சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கார்த்திகேசுவின் (தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்) மாமியாருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 01-10-85 (இன்று) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 1-00 மணிக்கு வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'கால வாசா' தகவல்: கா. கார்த்திகேசு.
மீசாலை தெற்கு, சாவகச்சேரி 1006

## மரண அறிவித்தல்

### பஞ்சாட்சரம் ராமேஸ்வரன்

ஆனைப்பந்தியடியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. சோ. பஞ்சாட்சரம் அவர்களினதும், கமலாம்பாள் அவர்களினதும் கனிஷ்ட புத்திரன் ராமேஸ்வரன் அகால மரணமானார். இவர் டாக்டர் ஞானேஸ்வரன் (மெக்சிக்கோ), யோகேஸ்வரன் (கனடா), விக்கினேஸ்வரன் (லண்டன்), அகிலேஸ்வரன் (மெக்சிக்கோ), மகேஸ்வரன், ரெங்கநாயகி ஆகியோரின் சகோதரனும், சிசிலியா, பத்மாவதி, ரதினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (01-10-1985) செவ்வாய்க்கிழமை மாலை 2 மணியளவில் ஆனைப்பந்தி 172/2, இல்லத்தில் இருந்து கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி கமலாம்பாள் பஞ்சாட்சரம்.

1007

## மரண அறிவித்தல்

### உயர் திரு. பொன்னம்பலம் இராமலிங்கம்

ஸ்ரீ கைலாசபிள்ளையார் கோவில் மனேஜரும் சைவப் பெரியார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பரம்பரையினரும் உயர் திரு பொன்னம்பலத்தின் ஏகபுத்திரனும் லெட்சுமியின் அருமை கணவரும் ஸ்ரீதேவி, சௌசல்யாதேவி, சரோஜினிதேவி, ஜெயதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஞானரத்தினம், விக்கினராசா, குமரகுருநாதன் ஆகியோரின் மாமனாரும், கபிலன், அனுஷா, தீனதயாளன் ஆகியோரின் பேரனும் யாழ்ப்பாணம் மெய்கண்டான் நிறுவனத்தின் முகாமையாளருமாகிய பொன்னம்பலம் இராமலிங்கம் 30-9-85-ல் சிவபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் பூதவுடல் 1-10-85 செவ்வாய்க்கிழமை (இன்று) பிற்பகல் 3-00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பயன்மணல் மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளவும்.

278, நாவலர் வீதி, மனைவி, மக்கள், மருமக்கள்.
நல்லூர். 1012


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram: Eelanadu Telephone: 22389 — 24126